மாதம் இரு முறை வெளிவரும் இலவச இதழ், 04 பெப்ரவரி 2007 - 17 பெப்ரவரி 2007, குரல் 09

# லண்டன் குரல்

Voice of London Tamils



ஸ்கைறோஸ் வெல்பெயர் பண்ட் - யுகே வழங்கிய சங்பமம் 2007


அடியார் முருகன் அடிக்கிறார் மொட்டை பக்02

"புலிகளின் அம்மா நான்" அடேல் பாலசிங்கம் பக்.04

தமிழகக் கட்சிகளின் முதலைக் கண்ணீர் பக்.06


தமிழ் மாணவர் 445,000 டொலர் பிணையில் பக்.07


METROPOLITAN POLICE

## கிரடிட் காட் மோசடியில் தமிழினி உரிமையாளர்களில் ஒருவர் கைது குற்றவாளிகளை இனம் காட்டும்படி மெற்றோ பொலிஸ் வேண்டுகோள் பக்.3

Civil Monitoring Commettiee தலைவர், United Socialist Party செயலாளர் சிறிதுங்க ஜெயசூரிய


# இலங்கையின் எதிர்காலம் இருண்டுள்ளது



"சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அக்கறையில்லை. அவர் யுத்தத்தையே விரும்புகிறார். வி புலிகளும் அதையே விரும்புகின்றனர். அதனால் இலங்கையின் எதிர்காலம் இருண்டே உள்ளது" என்கிறார் ஜனாதிபதித் தேர்தலில் பேட்டியிட்டு மூன்றாவதாக வந்த ஐக்கிய சோசலிசக் கட்சி செயலாளர் சிறிதுங்க ஜெயசூரிய. அவர் லண்டன் குரலுக்கு ஜனவரி 30ல் வழங்கிய செவ்வியில், ஜனாதிபதி மகிந்தவின் இந்த ஆட்சியை ஏற்படுத்தியதில் சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல புலிகளுக்கும் பொறுப்பு இருப்பதாக சிறிதுங்க சுட்டிக்காட்டினார். "தற்போது அமைக்கப்ட்டுள்ள சர்வ கட்சிக்குழு என்பது ஒரு 'முஸ்பாத்தி விளையாட்டு' என்று குறிப்பிட்ட சிறிதுங்க மூவின மக்களும் இணைந்து இந்த அதிகார வர்க்கத்திற்கு எதிராகப் போராடுவதன் மூலமே இலங்கையில் ஒரு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த முடியும்" என்று தெரிவித்தார். "தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிச்சயம் சிங்கள மக்கள் அங்கிகரிப்பார்கள் ஆனால் தற்போதுள்ள சிங்கள் அரசியல் தலைமைகள் சிங்கள மக்களை தவறாக வழிநடத்துகின்றன" என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் ஜனாதிபதி மாற்றியமைத்த அமைச்சரவையில் 54 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். இது தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள பெரிய அமைச்சரவையாக உள்ளது. குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அமைச்சரவைக்குத் தாவியவர்கள் தமது இறுதிக்காலத்தில் உள்ளவர்கள் எனத் தெரியவருகிறது. போகும் போது அமைச்சர்களாக போக விரும்புகிறார்கள் போலும். இந்த அமைச்சரவை மாற்றத்தில் ஆளும் கட்சியில் பலருக்கு மனவருத்தம் எனத் தெரியவருகிறது. இவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆதரவாகஉ ளளார்.

## இலங்கையின் ஜனநாயகம்



"இலங்கை: சுதந்திரமடைந்ததில் இருந்து ஜனநாயக்தின் நிலை" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ல் ஈஸ்றஹாமில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழர் தகவல் நடுவமும் தமிழ் சமூக அமைப்பு (Tamil Community Forum)ம் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன. இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளில் ஒன்றும் தமிழ் மக்களின் ஒடுக்கு முறைக்கு எதிராகக் குரல் கொடுத்துவரும் நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன (படம்) இதில் முக்கிய பேச்சாளராகக் கலந்துகொள்கிறார்.

## உங்களின் குரல்! லண்டன் குரல்!! லண்டனில் எங்கும் கேட்க்கும் (கிடைக்கும்)!!!

தற்போது லண்டன் குரல் 300க்கும் மேற்பட்ட தமிழ் கடைகள், சட்டத்தரணிகள் அலுவலகங்கள், எஸ்டேட் ஏஜெண்டுகள், சமூக நிறுவனங்கள், ஊடகங்கள், ஆலயங்கள், உணவகங்கள் என்பனவற்றிற்கு இலவசமாக தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. இன்னும் சிறிது காலத்தில் 500 தமிழ் நிறுவனங்களுக்கு குறையாமல் இலவசமாக தபால் மூலம் அனுப்பி வைக்க நாங்கள் முயற்சி எடுத்து உள்ளோம். வாசகர்கள் அருகில் உள்ள தமிழ் கடைகள், சட்டத்தரணிகள் அலுவலகங்கள், எஸ்டேட் ஏஜெண்டுகள், சமூக நிறுவனங்கள், ஆலயங்கள், உணவகங்கள் உன்பனவற்றில் லண்டன் குரலை பெற்றுக் கொள்ளலாம். கிடைக்கவில்லையானால், நிறுவனங்களுக்கு இன்னும் அதிக பிரதிகள் வேண்டுமானால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**020 2279 0754**

உண்மைகள் உறங்குவதில்லை.

04 பெப் 07 - 17 பெப் 07, குரல் 09

லண்டன் குரல்

## எட்டாத சமாதானம்

இலங்கை அரசுக்கோ, அவர்கள் சார்ந்த முன்னாள் போராளி அமைப்புகளுக்கோ வி.புலிகளுக்கோ மக்கள் மீதான அனுதாபம் என்பது அவர்களது உதட்டளவிலேயே உள்ளது. தமிழர்கள் கொல்லப்படும் போது வி.புலிகளும் சிங்கள மக்கள் கொல்லப்படும் போது அரசும் அதனை தமது அரசியல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்துவதற்கு அப்பால் அது தொடர்பாக எந்த கரிசனையும் கொள்ளவில்லை. மாறாக இக்கொலைகளே அவர்களின் இருத்தலை உறுதி செய்கிறது என்ற அச்சம் சமாதான விரும்பிகளிடம் உள்ளது.

இலங்கை அரசுக்கும் வி.புலிகளுக்கும் அப்பால் வி.புலிகளுக்கும் அவர்களின் முன்னாள் தளபதி கருணா அணிக்கும் இடையேயான மோதல்கள் நிலைமையை படுமோசமாக்கி உள்ளது. பேச்சு வார்த்தைகள் ஸ்தம்பிதம் அடைந்ததற்கு இது முக்கிய காரணமாக அமைந்துள்ளது. கருணா அணிக்கு முக்கியத்துவம் அளிப்பது தங்கள் அரசியல், இராணுவ நலன்களைப் பாதிக்கும் என்பதால் அவர்களை இராணுவத்தின் துணைப் பிரிவாகவே விடுதலைப் புலிகள் குறிப்பிடுகின்றனர்.

இரத்தக்கறை படியாத ஈழவிடுதலை இயக்கங்களே இல்லை. இயக்கங்களிற்னு இடையேயும் இயக்கங்களின் உள்ளும் இடம்பெற்ற படுகொலைகள் தமிழீழ விடுதலைப் பாதையை முற்றிலுமாகத் திசை திருப்பி இருந்தது.

இலங்கை அரசைப் பொறுத்தவரை தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே நடத்தி வருகிறது. தமிழ் மக்களுக்கு எதிரான கூட்டுப் படுகொலைகளும் பாலியல் பலாத்காரங் களும் திட்டமிட்ட வன்செயல்களும் அரசு தமிழின அழிப்பை திட்ட மிட்டு மேற்கொள்வதையே உறுதிப்படுத்து கிறது. இது தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்க எவ்விதத் திலும் உதவாது

சம்பந்தப்பட்ட எல்லோரும் தங்கள் பாத்திரங்களை உணராதவரை எமது மக்களின் இழப்புகள் தவிர்க்க முடியாதது. தமிழ் மக்களுக்கு சமாதானம் மிகவும் எட்டாத தூரத்திலேயே இருக்கும்.

ஆசிரியர்: த ஜெயபாலன்
ஆசிரியர்குழு: Dr பி சிவக்குமார், ஆர் சுரேஸ்குமார், ஜோ ஜெயவேந்தன்
நிர்வாகம்: ரி கொன்ஸ்ரன்ரைன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 079 1944 4994

'லண்டன் குரல்' பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

# அடியார் முருகன் அடிக்கிறார் மொட்டைக் கடிதம்

ஜனவரி 27ல் ஈஸ்ற்ஹாம் ரவுன் ஹோலில் இடம்பெற்ற ஆவரங்கால் சின்னத்துரையின் 80வது வயது நினைவு நிகழ்வு ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்நிகழ்வையொட்டி தமிழின நலன் விரும்பிகள் என்ற பெயரில் வெளியிடப்பட்ட மொட்டைக் கடிதமும் அதனை விநியோகித்தவர்கள் நடந்து கொண்ட முறையும் கூட்டத்தில் கலந்தகொண்டவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

கூட்டணியின் லண்டன் கிளைச் செயலாளர் பொ சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் ஸ்ரீபன்ரிம்ஸ், கவுன்சிலர் போல், தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பா உ மாவை சேனாதிராஜா, படுகொலை செய்யப்பட்ட கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைவிடப்பட்ட தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தேர்தலில் நின்றபோது தமிழரசுக்கட்சியின் தலைவராக இருந்த ஆவரங்கால் சின்னத்துரை, ஆனந்தசங்கரிக்கு ஆதரவாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு வீட்டுச் சின்னத்தை பயன்படுத்துவதற்கு எதிராக வழக்குத் தொடுக்க முற்பட்டார். ஆனால் வி.புலிகள் அவருடன் உரையாடி அவரை தம்பக்கம் திருப்பினர். அதன் பின்பு வன்னி சென்று தமிழ்ச்செல்வனைக் கண்டு வந்தார் சின்னத்துரை.

சின்னத்துரை வி.புலிகளையும் பகைக்காமல் எதிர்ப்பக்கமுள்ள ஆனந்தசங்கரியையும் பகைக்காமல் இடையால் சைக்கிளோட வெளிக்கிட்டு இந்த 80வயது நிகழ்வை ஏற்பாடு செய்தார்.



ஆனால் திருநீற்று பட்டையும் பொட்டுமாக உலாவும் பெட்டிசம், மொட்டைக் கடிதங்களுக்குப் பெயர் பெற்ற அடியவர் எக்ஸ்பிரஸில் அடித்தார் மொட்டைக் கடிதம். தனக்கு பெயர் வர எதுவும் செய்யும் இவர் சபையில் வாய் திறந்தால் கூவமாக வார்த்தைகளைக் கொட்டுவார் என்பது அவரை அறிந்த அனைவரும் அறிவர்.

# பிரிந்துபோன திருமதி குணா

பல வருட காலம் வெம்பிளியில் கலாநிதி நித்தியானந்தன் தலைமையில் சிறப்பாக இயங்கி வருகின்ற இலண்டன் தமிழ் நிலையத்தின் முதியோர் அமைப்பில் இருந்து திருமதி குணா வேலுப்பிள்ளை பிரிந்து சென்று வேறொரு அமைப்பை ஹரோ பகுதியில் ஆரம்பித்துள்ளார். டாக்டர் நித்தியானந்தன் தலைமையின் கீழ் இயங்கும் இலண்டன் தமிழ் நிலையத்தின் முக்கிய உறுப்பினராக திருமதி குணா வேலுப்பிள்ளை இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு நிர்வாகத்திற்கு கீழ் இருந்து கொண்டு அதே நிர்வாகத்துக்கு எதிராக மொட்டைக் கடிதம் போடுவதை விட இவ்வாறு பிரிந்து போவது மிகவும் சிறந்தது என LCT இன் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

சென்ற வருடம் இவ்வமைப்பின் தலைவராக சீவரத்தினம் நியமிக்கப்பட்டு பின்னர் அவர் பதவி விலக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் ஜனவரி பிற்பகுதியில் ராஜன் மனுவேற்பிள்ளை தலைவராக தெரிவு செய்யப்பட்டார். திருமதி குணா வேலுப்பிள்ளையுடன் 15 உறுப்பினர்கள் பிரிந்து சென்றுள்ளதாக மேலும் அறியப்படுகின்றது.



கலாநிதி நித்தியானந்தன்


குணா வேலுப்பிள்ளை

# புகையிரத கட்டணங்கள் அதிகரிப்பு



இங்கிலாந்தின் நீண்டதூர புகையிரதக் கட்டணங்கள் புதுவருடத்துடன் 4.3 வீதத்தால் அதிகரித்துள்ளன. இந்த அதிகரிப்பு இந்நாட்டின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை விட 1% அதிகமானதாகும். அதிலும் விட சில ஒழுங்குபடுத்தப்படாத கட்டணங்கள் (nonregulated fares) ஆன ஹீத்துரு, கற்விக் எக்ஸ்பிரஸ் புகையிரத ரிக்கற் கட்டணங்கள் 7.3% தத்தால் அதிகரித்துள்ளன. Virgin West Cost Rail Travel தனது கட்டணங்களை முற்பதிவு செய்யப்பட்ட மற்றும் off peak நேரங்கள் தவிர்ந்த பிரயாண கட்டணங்களை 6.6% மாகவும் ஆநசஉல வுசயஎைள 3.7% மாகவும் அதிகரித்துள்ளன.

இக்கட்டண உயர்வுகள் புகையிரதங்களில் சனநெரிசலைக் குறைப்பதற்கும், அபிவிருத்திக்கான நிதிசேகரிப்புக்கும் உதவுவதாக தெரிவிக்கப்படுகிறது. 2040ம் ஆண்டளவில் இக்கட்டணங்கள் 30% வீதமாக உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. போக்குவரத்து திணைக்களம் புகையிரத சேவை வளருவதை தாம் விரும்புவதாக கருத்து வெளியிட்டுள்ளது. அதேவேளை Railway watchdog passenger focus புகையிரதசேவைக் கட்டணங்கள் இலகுபடுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.




# மீண்டும் மோட்கேஜ் அதிகரிக்கிறது

கடந்த ஜனவரி 11ம் திகதி இங்கிலாந்து வங்கி தனது வட்டிவீதத்தை 0.25 வீதத்தால் 5.25% மாக அதிகரித்துள்ளதானது பிரித்தானியாவின் நிதித்துறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக பணவீக்கம் அதிகரிப்பதுடன் வீட்டுக் கடன்களும், கடன் மீளச்செலுத்தும் தொகையும் அதிகரிக்கின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதால் சம்பள உயர்வுக்கான கோரிக்கைகளும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நாட்டில் மூன்றில் இரண்டிற்கும் அதிகமான ஊதிய உயர்வு குறித்த தீர்மானங்கள் ஜனவரி - ஏப்ரல் மாத இடைக்காலத்திலேயே இடம்பெறுகின்றது.

இதேவேளை ஐரோப்பிய மத்திய வங்கி தனது 3.5% வட்டி வீதத்தில் எவ்வித மாற்றத்தையும் மேற்கொள்ளவில்லை. எனினும் பணவீக்கம் அதிகரிப்பதால் இந்த வங்கி வீதமும் எதிர்வரும் பங்குனி மாதமளவில் 0.25%த்தால் அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. பிரித்தானிய வங்கிவீதம் தற்போது அமெரிக்காவின் வங்கிவீதத்துடன் சமமாகியுள்ளது.

# சுனாமி நிதியில் 9.3 மில்லியன் பவுணுக்கு கணக்கு இல்லை!

2004 மார்கழியில் நிகழ்ந்து 300,000 உயிர்களைப் பலிகொண்ட சுநாமிப் பேரழிவின் பின்னர் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகச் சேகரித்த 76.8 மில்லியன் பவுண் சுநாமி நிதியிலிருந்து 9.3 மில்லியன் பவுண்கள் காணாமல் போயுள்ளதாகத் தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இத்தொகைக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறியும்படி சர்வதேச அபிவிருத்தித் திணைக்களத்துக்கு ஆணையிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் நிவாரண அமைப்புகள், அரசாங்க உதவி வழங்கும் முகவர்கள் ஆகியோரிடம் இருந்து வழங்கப்பட்ட சுநாமி நிதிக்கான விளக்கமான கணக்கு கேட்கப்பட்டுள்ளது. இலங்கையில் 'சுநாமி முதலாளி' களின் வயிற்றில் இச்செய்தி புளியைக் கரைக்கவே செய்யும்.

## சம்பளம் இல்லா உத்தியோகம்

கடந்த ஆண்டு 23 பில்லியன் பவுண் பெறுமதியான மேலதிக வேலைநேரத்தை பிரித்தானியத் தொழிலாளர்கள் தமது தொழில்கொள்வோருக்கு சம்பளமில்லாது வழங்கியுள்ளதாக T U C யூனியன் அறிக்கையொன்று தெரிவித்துள்ளது. இது சராசரி ஊழியரின் ஒரு வருட வேதனத்தில் 4,800 பவுண்களாகும். மேற்படி யூனியனின் பிரதம செயலாளர் பிரெண்டன் பார்பர் கருத்துத் தெரிவிக்கையில், பிரித்தானியர்கள் ஐரோப்பாவிலேயே அதிக வேலை நேரத்தைக் கொண்டுள்ளதாகவும், பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் சட்டபூர்வமான வேலை நேரத்தைவிட மேலதிகமாகச் சுரண்டுவதை ஒரு கலாச்சாரமாகவே மாற்றி வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நாட்டில் சட்டபூர்வமாக ஒருவர் வாராந்தம் 48 மணித்தியாலங்கள் வேலை செய்யலாம் என்பதை மூன்றில் ஒரு பங்கு ஊழியரே அறிந்திருக்கின்றனர். பிரான்ஸ், ஜேர்மன் நாட்டுத் தொழிலாளர்கள் பிரித்தானியரை விட வாராந்தம் 4 மணி நேரம் குறைவாக வேலை செய்கின்ற போதிலும், தேசிய உற்பத்தித் திறனில் பிரிட்டனை விட இவ்விரு நாடுகளும் முன்னணியில் உள்ளன.

## வேலியே பயிரை மேய்கிறது

கடந்த ஆண்டு பிரிட்டனில் 180 பொலிசார் சட்டவிரோத நடத்தை காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்டு உள்ளனர் என்று டெய்லிமிரர் வெளியிட்டுள்ள ஆய்வு தெரிவிக்கின்றது. 33 பொலிஸார் கொலை, பாலியல் வன்முறை, திருட்டு போன்ற குற்றச் செயல்களுக்காகத் தண்டிக்கப்பட்டும் 152 பேர் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக இடைநிறுத்தப்பட்டும் உள்ளனர்.

மஞ்செஸ்டர் பிராந்தியத்தில் மட்டும் 43 பேர் இவ்வகையான குற்றச்செயல்களுக்காக கடந்த ஆண்டு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



## ஒக்ஸ்போர்ட் ஸ்ரீற் தமிழ் முதலாளியின் மனவருத்தம்

லண்டனில் உல்லாசப் பயணிகளைக் கவரும் ஒக்ஸ்போர்ட் வீதிக் கட்டிடங்கள் சில இடிக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட உள்ளது. இது தொடர்பாக வெஸ்ட்மின்ஸ்டர் கவன்சில் பாரிய திட்டமொன்றைத் தீட்டியுள்ளது. அதன் ஒரு கட்டமாக அங்காடி வியாபாரிகளாகவுள்ள சிறு முதலீட்டாளர்கள் விரைவில் அப்புறப்படுத்தப்பட உள்ளார்கள்.

அந்த வீதியில் கடந்த ஏழு வருடங்களாக உல்லாசப் பயணிகளுக்கான நினைவுச் சின்னங்களை விற்பனை செய்யும் ஈழத்தவரான கனகசோதிநாதன் இது தொடர்பான தன் ஆற்றாமையை மெற்றோ பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். தான் ஆண்டொன்றிற்கு 93ஆயிரம் பவுண் வாடகை செலத்தி அவ்விடத்தில் வியாபாரம் செய்வதாகவும் Souvenirs of London என்ற தனது கடை உல்லாசப் பயணிகளிடையே பெயர் பெற்றதாகவும் தெரிவித்தார். தான் அவ்விடத்திலிருந்த துரத்தப்படும் பட்சத்தில் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## பிரிட்டனின் அடிமை வியாபாரம் பிரதமர் மனவருத்தம்

இங்கிலாந்தில் அடிமை வியாபாரம் தடைசெய்யப்பட்டு இருநூறு ஆண்டுகள் 2007இல் பூர்த்தியாகின்றது. இரு நூற்றாண்டு நிறைவு 25 மார்ச் 2007இல் பிரிட்டனில் நினைவுகூரப்படவுள்ளது. இது தொடர்பாக பிரதமர் பிளையர் கருத்துத் தெரிவிக்கையிலே அடிமை வியாபாரத்தில் கடந்த நூற்றாண்டில் இங்கிலாந்து மும்முரமாக ஈடுபட்டிருந்ததையிட்டு வருத்தம் தெரிவித்திருந்தார். இன்று மானிடத்துக்கெதிரான குற்றச்செயலாக அனைவராலும் கருதப்படும் அடிமை வியாபாரம், அந்நாளில் சட்டபூர்வமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததை தன்னால் நம்பக் கடினமாக உள்ளதாகத் தெரிவித்தார்.


# கிறடிட்காட் மோசடிகளில் தமிழினி உரிமையாளர்களில் ஒருவர் கைது குற்றவாளிகளை அடையாளம் காட்டும்படி மெற்றோ பொலிஸ் வேண்டுகோள்

### கிறடிட்காட் மோசடி

சவுத்தோல் மற்றும் குரொய்டனில் கிளைகளைக் கொண்ட தமிழினி உரிமையாளர்களில் ஒருவரான இளங்கோ என்பவர் கிரடிட் காட் மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சென்னையில் கைது செய்யப்பட்டு உள்ளார். வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் 30 லட்சம் இந்திய ரூபாயின் பெறுமதிக்கு மேல் கள்ள கிரடிக்காட் மூலம் ATM இயந்திரங்களில் இருந்து பணம் எடுத்துள்ளதாக சென்னை பொலிசார் தெரிவித்துள்ளனர். இவரை கைது செய்த போது அவரிடம் 28 கிரடிக் காட்டுகள் இருந்துள்ளது. அவரிடம் இருந்து இரண்டு ஸ்கோப்பியா கார்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா விசாவில் சென்னைக்கு சென்ற இவர் ஆழ்வார் திருநகரில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்துள்ளார்.

### பொலிஸ் வேண்டுகோள்

இதற்கிடையே இம்மோசடிகளைத் தடுப்பதற்கு லண்டன் தமிழ் மக்களின் ஒத்தழைப்பைக் கேட்டு மெற்றோ பொலிட்டன் பொலிஸ் அறிக்கை வெளியிட்டு உள்ளது. தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பிரித்தானியத் தமிழர்கள் சிலர் கிறடிட்காட் மோசடியில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தே ஸ்கொட்லன்ட் யாட் இந்த அறிக்கையை வெளியிட்டு உள்ளது. களவாடப்பட்ட வங்கி வாடிக்கையாளர்களின் தகவல்களை சட்டவிரோதமாக பிரதியீடு செய்த காட்களைப் பயன்படுத்தி ஏரிம் மெசின்களில் இருந்தும் வியாபார நிலையங்களில் இருந்தும் பணத்தை கொள்ளையடிப்பதாக மெற்றோ பொலிட்டன் பொலிஸ் தெரிவிக்கின்றது.



கிறடிட்காட் மோசடியில் குற்றம்சாட்டப்பட்டு உள்ள தமிழினி Cash & Cary உரிமையாளர்களில் ஒருவரான இளங்கோ

"உங்கள் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மிரட்டப்படுகின்றனர், அவர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர், சில சமயங்களில் கொலையும் செய்யப்படுகின்றனர். இந்த வன்முறையை நிறுத்த மெற்றோ பொலிட்டன் பொலிஸாருக்கு உங்கள் உதவி தேவை. உங்கள் சமூகத்தை பாதுகாக்க நாங்கள் உறுதியாக இருக்கிறோம். நீங்கள் எங்களுடன் ஒத்துழைக்காத வரையில் உங்களை இலக்கு வைப்பவர்களை எங்களால் கண்டுபிடிப்பது மிகவும் கடினம்." என்று மெற்றோ பொலிட்டன் பொலிஸ் தனது அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளது.

### இளங்கோ கைது

சென்னையில் உள்ள எஸ்ஆர்எம்சி மருத்துவக் கல்லூரிக்கு அருகில் உள்ள வங்கி ஒன்றின் ஏரிஎம் மெசினில் இருந்து பல கிரடிக்காட்டுகளை மாற்றி மாற்றி பாவித்து இளங்கோ பணத்தை எடுத்ததை அவதானித்த ஒருவர் பொலிசாருக்கு கொடுத்த தகவலின் அடிப்படையில் சென்னை உதவி கமிசனர் பாலசுப்பிரமணியம் தலைமயில் சென்ற பொலிஸ் குழுவினர் இளங்கோவை கைது செய்ததாக தமிழக காவல்துறை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இவரை மேலதிக விசாரணைக்கு உட்படுத்திய பொலிசார் இவர் பெரும் தொகைப் பணத்தை உண்டியல் (ஹவாலா) மூலம் பிரித்தானியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் சட்ட விரோதமாக பரிமாற்றம் செய்ததும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாக அச் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது. அவை பற்றிய மேலதிக விசாரணைக்கு லண்டன் ஸ்கொட்லாண்ட்டின் உதவியை தமிழக பொலிசார் நாடியுள்ளனர்.

### தமிழ் கடைகள்

லண்டனில் உள்ள சில தமிழ் வர்த்தக நிலையங்கள் கிரடிட்காட் மோசடியில் ஈடுபடுவதாகவும் செய்திகள் வெளியாகின்றன. தமிழினி உரிமையாளர்களில் ஒருவரான இளங்கோ கைது செய்யப்படுவதற்கு முன்னர் தாய்லந்தில் ஜனவரி 3ல் கைது செய்யப்பட்ட சிவஞானம் ஞானகாந்தன்(35) நுளவயவநள4ரு நிறுவனத்தின் முக்கிய பங்குதாரர் என்பது குறிப்பிடத்தக்கது. 6.2 மில்லியன் பவுண்களை மோசடி செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பிறைட் சிக்கின் உரிமையாளர்கள் இரு ஆண்டுகளுக்கு முன் கைது செய்யப்பட்டது தெரிந்ததே. மேலும் சில வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கிறடிட்காட் மோசடியில் கைது செய்யப்பட்டு பட்டி அணிவித்து அவர்களது வீடுகளிலேயே சிறைப்படுத்தப்பட்டனர். இளைஞர் குழுக்களுடன் இணைந்து மோசடியில் ஈடுபட்ட சில வர்த்தக நிலையங்கள் பிற்காலங்களில் அதனைச் தொடர்ந்து செய்ய மறுத்த போது இளைஞர் குழுக்களுடன் மோதிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளது.

### வி புலிகள்

பெரும்பாலும் இந்த கிறடிட்காட் மோசடிகள் சுயநல நோக்கங்களுடனேயே செய்யப்பட்டு உள்ளது. இதற்கும் வி.புலிகளுக்கும் தொடர்புகள் இருப்பது இதுவரை உறுதியாக நிருபிக்கப்படவில்லை. ஆனால் மோசடியில் பிடிபடுபவர்கள் தங்களை நியாயப்படுத்திக் கொள்ள தாங்கள் விடுதலைப் போரட்டத்திற்காக இவ்வாறு ஈடுபட்டதாக வாக்கு மூலங்களை கொடுத்து உள்ளனர். இன்னும் சிலர் தங்களை தீவிர வி.புலி ஆதரவாளராகக் காட்டிக் கொண்டு, வி.புலிகளின் தலைவர் வே பிரபாகரனின் படத்தை பெரிதாக மாட்டி வைத்துக் கொண்டு அதற்குக கீழிருந்து கள்ளக் காட் போடுகின்றனர். இதனால் இந்த கள்ளக்காட் விடயத்திற்கும் புலிகளுக்கும் தொடர்பு இருப்பது போன்ற ஒரு விம்பம் தோற்றுவிக்கப்பட்டு உள்ளது.

சில வியாபார நிறுவனங்களின் இந்த மோசடி, நேர்மையாக வியாபார முயற்சியில் ஈடுபட்டு வெற்றியீட்டி உள்ள தன் போன்ற பலருக்கும் அவமானத்தையும் களங்கத்தையும் ஏற்படுத்துவதாக கிழக்கு லண்டனில் கிறடிட்காட் மெசினை பயன்படுத்தாது வெற்றியீட்டிய பல கடைகளுக்க சொந்தக்காரரான வர்த்தகர் லண்டன் குரலுக்குத் தெரிவித்தார்.


(ஜனவரி 28ல் ராணி வாராந்த இதழில் வெளியான பேட்டி)

# "புலிகளின் அம்மா நான்"

## அடேல் பாலசிங்கம்

அடேல் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சிங்கமாக விளங்கிய அன்ரன் பாலசிங்கத்தின் மதிப்பிற்குரிய மனைவி. விடுதலைப், புலிகளின் போராட்டம் தனித்தமிழ் ஈழம் என்கிற லட்சியங்களை பேச்சிலும் மூச்சிலுமாக கொண்டு லண்டனில் வாழ்ந்து வரும் உணர்வுபூர்வமான வெள்ளைக்கார தமிழச்சி அவர்.

உடல் நலக்குறைவு ஏற்பட்டு பாலசிங்கம் மரணம் அடைந்த போது அடேல் வடித்த கண்ணீரும் கதறி வெடித்த துக்கச்சிதறலும் காற்றோடு கலந்துவிட்டன. அடேல் சொல்லுகிறார்.



பாலா தம்பதிகளுடன் வி:புலிகளின் தலைவர் (வலம்), தமிழ்ச் செல்வன் (இடம்)

### நர்ஸ்

"என் பாலாவுடன் நான் வாழ்ந்த காலங்கள் எல்லாம் விதியின் பிடியில் இருந்து இனி மீள முடியாத இறந்த காலம்.



நான் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவள். லண்டனில் ஒரு ஆஸ்பத்திரியில் நர்ஸ் ஆக வேலை பார்த்துக் கொண்டு இருந்தேன். அப்போது எனக்கு ஒரு நோயாளியாக இன்னொரு பெண்ணுக்கு கணவராக அறிமுகமானவர் தான் பாலா. கணவன், மனைவி இருவருமே சிறுநீரகக் கோளாறால் அவதிப்பட்டார்கள் தீவிரமாக மருத்துவம் செய்த போதிலும் எங்களால் அவரின் மனைவியைக் காப்பாற்ற முடியவில்லை. இறந்துகிடந்த மனைவியின் உடலைப் பார்த்து பாலா கதறி அழுதது இப்போதும் என் ஆழ்மன நினைவுகளில் அகலாமலே இருக்கிறது.

### பழக்கம்

கொழும்பு நகரில் உள்ள லண்டன் தூதரகத்தில் மொழி பெயர்ப்பாளராக பாலா பணிபுரிந்து கொண்டிருந்த காலகட்டம் அது. பாலாவுடன் நான் நெருங்கிப் பழகினேன். மனசுகள் இடம்மாறின. தெற்கு லண்டனில் 1978ம் ஆண்டு பதிவுத்திருமணம் செய்துகொண்டோம். அப்போது பாலாவுக்கு 36 வயது. காதல் கணவருடன் தனிக்குடித்தனம் நடத்துவதற்காக யாழ்ப்பாணம் வந்திறங்கினேன். இலங்கையில் தனித்தமிழ் ஈழம் தொடர்பான போர் நீறு பூத்த நெருப்பாக கனன்று கொண்டிருந்த காலம் அது. சிங்கள அரசுடன் உச்சகட்ட போர் நடத்தினால் தான் தனிநாடு கிடைக்கும் என்றார் பிரபாகரன். ஈழப்போரை முன்னெடுத்துச் செல்வதில் பிரபாவுக்கு சிறந்த ராஜதந்திரியாகவும் உலக நாடுகளின் மத்தியில் இலங்கைத் தமிழர்களின் அவல நிலையை வெளிச்சம் போட்டுக்காட்டி ஆதரவு திரட்டும் ஆலோசகராகவும் உருமாறினார் என் பாலா. நான் இருவருக்கும் உறுதுணையாக இருந்தேன்.

விடுதலைப் புலிகளின் வீராங்கனையர் அமைப்புக்கு நான் தலைவியாக இருந்ததற்காக அவுஸ்திரேலிய அரசு என்னைக் கைது செய்ய முயன்றது எல்லாம் தனிக்கதை" என்ற அடேல் முகத்தில் தாள முடியாத உணர்ச்சிப் பெருக்கு.

### சென்னை வாசம்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் - மதிவதனி இடையே காதல் திருமணத்தை பல்வேறு எதிர்ப்புக்கு மத்தியில் முன்னின்று நடத்தி வைத்தது பாலசிங்கம் அடேல் தம்பதி தான். "விடுதலைப் புலிகளுக்கு இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இராணுவப் பயிற்சி அளித்த காலகட்டத்தில் நான், பாலா, பிரபாகரன் மூவரும் சென்னை திருவான்மியூரில் தங்கி இருந்தோம். விடுதலைப் புலிகளின் அமைப்புக்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரம் திரட்டுகிற விசயத்தில் பாலா ஒருபுறம் மும்முரமாக இருக்க இந்தியா கொடுக்கிற இராணுவப் பயிற்சியை முறையாக பயன்படுத்துவதிலும் சரியான திட்டமிடலோடு பணியாற்றுவதிலும் தீவிரம் காட்டினார் பிரபா.

இதற்கிடையே யாழ்ப்பாணத்தில் தமிழ் மாணவர்களின் உரிமைகளுக்காக உண்ணாவிரதம் இருந்து கைதான மதிவதனி, வினோஜா, லலிதா, ஜெயா என்ற 4 பெண்களை போராளிகள் அமைப்பு காப்பாற்றி சென்னைக்கு அனுப்பி வைத்தது. எங்களின் திருவான்மியூர் வீட்டில் தான் அந்த நால்வரும் தங்கி இருந்தனர்.

பாலாவுடன் இராணுவப் பயிற்சி குறித்து ஆலோசனை நடத்துவதற்காக பிரபாகரன் தினந்தோறும் எங்கள் வீட்டுக்கு வந்து போவது வழக்கம். அப்போது பிரபா மதியிடையே பழக்கம் ஏற்பட்டது. சாதாரணமாக தொடங்கிய நட்பு கடைசியில் காதலாகியது. அவர்களின் திருமணத்தை நடத்தி வைக்க விரும்பினார் பாலா. ஆனாலும் போராளிகளின் மத்தியில் இதற்கு பலத்த எதிர்ப்பு. நானும் பாலாவும் காதல் வலிமையை அவர்களுக்கு பக்குவமாக எடுத்துச் சொன்னோம். கடைசியில்



எங்களின் முயற்சி வென்றது. பிரபா மதி திருமணத்தை சென்னை திருப்போரூர் கோயிலில் 1984ம் ஆண்டு நடத்தி வைத்தோம். காதல் தம்பதிகள் இருவரும் திருமணம் முடிந்த கையோடு எங்களிடம் ஆசி பெற்றனர். அப்போது நாங்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தோம்.

### போராடுவேன்

பிரபாவுக்கு பாலாவிடம் மிகுந்த அன்பு உண்டு. அண்ணை என்று தான் அவரை பாசத்துடன் குறிப்பிடுவார். விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தமட்டில் தனிப்பட்ட ஒருவரின் மரணம் எங்களிடம் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை என்றாலும் பாலாவை நிரந்தரமாக பிரிந்த போது நான் பட்ட கஸ்ரங்களை விட நூறு பங்கு கூடுதல் வேதனைகளை பிரபா குடும்பம் நிச்சயமாக அடைந்திருக்கும்.

பூடான் தலைநகர் திம்புவில் 1985ம் ஆண்டு தொடங்கிய இலங்கை அமைதிப் பேச்சு வார்த்தை முதல் கடந்த ஆண்டு நடந்த ஜெனீவா பேச்சுவார்த்தை வரை புலிகளின் தனித்தமிழ் ஈழ கோரிக்கையை முன்வைத்து வாதாடி வந்தவர் பாலா. இலங்கையில் சுதந்திரக் காற்றை சுவாசிப்பதற்காக என்னுடைய நுரையீரல் ஏங்குகிறது என்று அவர் அடிக்கடி குறிப்பிடுவார்.

பாலாவின் லட்சிய கனவுகளை எட்டுகிற விதத்தில் உணர்வுபூர்வமாக நான் போராடப்போகிறேன். விடுதலைப் புலிகளுக்கு இனி அன்னையாக பாலாவின் இடத்தில் இருந்து செயல்பட ஆயத்தமாகி வருகிறேன்" என்று முத்தாய்ப்புடன் பேட்டியை முடித்த போது ஈழத்தின் விடியலுக்காக துக்கத்தையும் தூக்கத்தையும் மறக்கும் அடேல் பாலசிங்கத்தின் முகத்தில் தாரை தாரையாய் கண்ணீர் கண்ணீர்!!!

# தோழர் இரட்ணசபாபதிக்கு பாரிஸில் நினைவுக்கூட்டம்




ஈழ புரட்சிகர அமைப்பின் (ஈரோஸ்) ஸ்தாபகர் தோழர் இரட்ணசபாபதியின் நினைவுக் கூட்டம் அவ்வமைப்பின் பிரெஞ்சுக்கிளை தோழர்கள் குகன், அழககிரி ஆகியோரின் முன்முயற்சியினால் ஜனவரி 14ல் பாரிசில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பல தரப்பினரும் கலந்து கொண்டு தங்கள் அஞ்சலியையும் கருத்துக்களையும் வழங்கினார்கள்.

இந்நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் அரசியல் செயற்பாட்டாளரும் பெண்ணிய வாதியுமான தோழி ஜென்னி பேசும்போது, தோழர் இரட்ணசபாபதி ஈழப் போராட்டத்தினை இடதுசாரி கோட்பாட்டின் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களின் கரிசனையுடன் வழிநடத்தியவர் என்றும் இதனால்தான் மலையக மக்களையும் கிழக்கின் வறிய கிராமங்களையும் உள்ளடக்கிய வேலைத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்தார் என்பதையும் எடுத்துக் கூறினார். ஈழப் போராட்டம் என்பது திருகோணமலையை விடுவிப்பதில் இருந்தே ஆரம்பமாகிறது என்று தோழர் இரட்ணசபாபதி அன்றைய காலத்தில் சுட்டிக் காட்டியதை தோழி ஜென்னி அப்போது நினைவு கூர்ந்தார்.


தோழர் இரட்ணசபாபதி மலையக மக்கள் மீது கொண்ட கரிசனை பற்றியும் சர்வதேச இயக்கங்களோடு அவருக்கு இருந்த உறவுகள் பற்றியும் அவ் உறவுகள் எவ்வாறு ஈழப்போராட்டத்தற்கு பயன்பட்டதையும் அவர் அனைத்து இயக்கங்களுக்கும் இயக்க வேறுபாடு இன்றி இச்சர்வதேச உறவுகளின் உதவிகளை பெற்றுக்கொடுத்தார் என்பதைப் பற்றியும் இக்கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டது. அத்தோடு இயக்கங்களின் ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் அவரின் பங்களிப்பு, காத்திரம் பற்றியும் இக்கூட்டத்தில் பலரால் எடுத்துரைக்கப்பட்டது.

தோழர் இரட்ணசபாபதி நினைவாக ஈழவர் திசைகாட்டி என்னும் பெயரில் ஒரு நூலும் இந்நிகழ்வில் வெளியிடப்பட்டது. இந்நினைவுக் கூட்டத்தில் பல்வேறு அரசியல் கருத்துநிலை கொண்ட அரசியளாலர்களின் உரைகள் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# இரு ஆண்டுகளில் ஈரான் அமெரிக்க யுத்தம்

ஈரானுக்கு எதிரான யுத்தம் இன்னும் இரண்டு வருடங்களில் முடுக்கிவிடப்படலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பிரதான ஆலோசகர் கடந்த ஜனவரி 3இல் கருத்து வெளியிட்டிருக்கிறார். இஸ்ரவேலில் ஈரானுக்கு எதிரான அலை தீவிரமாகிவருவதாகவும், நவம்பர் 2008இல் ஜோர்ஜ் புஷ் ஆட்சியிலிருந்து இறங்கும் முன்னதாக இஸ்ரவேல் ஈரானுடன் வலிந்து போரிட முன்வரலாம் என்றும் அந்த சீ.ஐ.ஏ.யின் ஈரானுக்கான சிறப்புப் பிரதிநிதி சுநரநட ஆயசஉ புநசநஉாவ கருத்து வெளியிட்டுள்ளார். அமெரிக்க ஆதரவும், ஈராக் ராணுவ தளத்திலிருந்து பிரிட்டனின் விமானப்படையின் உதவியும் இதற்கு வழங்கப்படலாம் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.



ஈரான் அணு ஆயதப்பரிசோதனையைத் தொடர்வதைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் ஏகமனதாக தடையுத்தரவு பிறப்பித்துள்ளமையும் கவனிக்கத்தக்கது.

# மோசடியில் பில்லியன் டொலரை இழக்கிறது இலங்கை

இலங்கை அரசு ஆண்டுக்கு ஒரு பில்லியன் டொலரை மோசடியில் இழப்பது தெரியவந்துள்ளது. பாராளுமன் றத்தின் Committee on Public Enterprises (COPE) இத்தகவலை வெளியிட்டு உள்ளது. தனியார் மயமாக்கல் மற்றும் Board of Investment (BOI) என்பவற்றிலேயே பெரும்பாலலான மோசடிகள் இடம் பெறுவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீடுகளைக் கவர வேண்டிய Board of Investment (BOI) அமைப்பு பெரும் முதலீட்டாளர்களை அணுகாமல் ரெஸ்ரோரன்களைளயும் மசாஜ் பாலர்களையுமே தனக்குக் கீழ் திறந்து வைத்துள்ளது. மேலும் இவற்றுக்காக மோசடியான அவணங்களையும் இவ்வமைப்பு தயாரித்து உள்ளது தற்போது அம்பலமாகி உள்ளது.

# மீண்டும் டானியல் ஒடேகா



வெனிசுவெலா ஜனாதிபதி சாவஸ் உடன் டானியல் ஒடேகா

தென்னமெரிக்க நாடான நிக்கரா குவாவில் கடந்த நவம்பரில் இடம்பெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற 61 வயதான முன்னாள் மார்க்சிய கிளர்ச்சியாரும் சான்டினிஸ்ரா தலைவருமான டானியல் ஒட்டேகா ஜனவரியில் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

சான்டினிஸ்ரா கிளர்ச்சியாளர்கள் தலைமையிலான 23 அமைப்புக்களின் கூட்டு முயற்சியால் 1979ல் சர்வாதிகாரி சோமோசா ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்டார். தொடர்ந்து வந்த இவரது ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடை, உள்நாட்டு பொருளாதார சீர்திருத்தங்கள், உள்நாட்டு அரசியல் எதிரிகளை கையாளுதலில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் (குறிப்பாக அமெரிக்க ஆதரவுடன் இயங்கிய கொன்ட்ரா கிளர்ச்சியாளர்கள்) என்பவற்றால் குழப்பநிலைகள் ஏற்பட்டன. காலப்போக்கில் தனியாரிடமிருந்து நில சுவீகரிப்பு போன்ற பல தீவிர பொருளாதாரக்கொள்கைகளை ஒட்டேகா கைவிட்டார். 1990ல் ஏற்பட்ட தேர்தல் தோல்வியுடன் இவரது கடும்ஆட்சி முடிவுக்கு வந்தது.

தற்போது பட்டினி, வறுமை, ஊழல் என்பவற்றை ஒழிப்பதாக வாக்குறுதிகளை முன்வைத்து இவர் திரும்பவும் பதவிக்கு வந்துள்ளார். அமெரிக்காவுடன் நடபுறவை பேண விரும்புவதாக தெரிவுத்துள்ள இவர் அமெரிக்காவுக்கெதிரான கடும்போக்காளர்களான கியூபா. வெனசுவெலா முதலான நாடுகளுடனும் இறுக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளார்.

# மாவோயிஸ்ட்கள் ஆட்சியில்



நேபாளத்தில் முதல் தடவையாக மாவோயிஸ்ட்டுக்கள் ஆட்சியில் பங்கேற்று உள்ளனர். நேபாளத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற சமாதான உடன்படிக்கையின் விளைவாக ஜனவரி நடுப்பகுதியில் 330 ஆசனங்களைக் கொண்ட அரசவையில் 83 மாவோயிஸ்ட் கிளர்க்கியாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக சத்தியப்பிரமாணம் செய்தனர். கடந்த 10 வருடகாலமாக இந்நாட்டில் இடம்பெற்ற கிளர்ச்சிகளின் காரணமாக 13,000 பேர் பலியாகியிருந்தனர்.

மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்கள பாராளுமன்றம் வருவதற்கு வழிவகுக்கும் வகையில் புதிய இடைக்கால அரசியல் அமைப்பொன்றை கொண்டுவருவதற்கு நேபாள பாராளுமன்றம் முன்பு ஏகமனதாக ஆதரவளித்திருந்தது. சமாதான நிலை உருவாக வேண்டுமென்ற அயல்நாடான இந்தியாவின் உந்துதலும் இந்தசரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்கு ஒரு காரணியாகக் கருதப்படுகிறது.

அதேசமயம் மாவோயிஸ்டுகள் ஆட்சியில் இணைந்ததை அடுத்து அவர்களுடைய ஆயுத தளபாடங்கள் இந்தியாவுக்கு கடத்தப்படுவதாக இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் கவலையடைந்து உள்ளன.


இதற்கிடையே தமிழ்நாட்டில் வி.புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தெகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் மும்பாயில் உள்ள ஒரு தீவிரவாதக் குழுவைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்தே வெடிகுண்டுகள் தயாரிப்பதற்கான பொருட்களை கொள்வனவு செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவில் உள்ள தீவிரவாதக் குழுக்களுக்கும் வி புலிகளுக்கும் உள்ள உறவுகள் பற்றி இந்தியா மிகுந்த கவனமெடுத்து வருகிறது.




**A revolutionary new financial product with FSA approval and backed by one of the longest established and well known international financial institutions is seeking distributors (individuals only) within the Tamil / Sri Lankan communities.**

**Call Raj on 0207 871 0485 to discuss the opportunity.**

## தொழிலாளர் நலன்:
# தமிழகக் கட்சிகளின் முதலைக் கண்ணீர்



கலைஞர் கருணாநிதி

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு பின்பு ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் மக்களை குழப்பிக் கொண்டு இருக்கிறார்கள். மன்மோகன்சிங் அரசின் நடைமுறைத் திட்டமான பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கல் என்பது உலக வர்த்தகம் மற்றும் புதிய பொருளாதாரக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதன் ஒரு பகுதியாகும். முன்பு வர்த்தக துறை அமைச்சராக இருந்த மறைந்த முரசொலிமாறன் உலக வர்த்தக ஒப்பந்தத்தில் 2010 ஆண்டுக்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திட்டங்களுக்கு உடனடி ஒப்புதல் அளித்து அனைவரையும் அதிர்ச்சி அடைய வைத்தார். இப்பொழுது எதிர்க்கட்சி ஆளுங்கட்சி ஆகியவற்றில் உள்ள கட்சிகள் மன்மோகன் சிங்குக்கு ஆதரவு அளித்தும், அவர் நடைமுறைப்படுத்தும் கொள்கைகளுக்கு உறுதுணையாகவும் இருக்கின்றன.

அதன் ஒரு நடவடிக்கையாக தமிழ்நாட்டில் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை தனியாருக்கு விற்க நிதிமந்திரி சிதம்பரமும் பிரதமர் மன்மோகன்சிங்கும் உலக நிபந்தனையை நடைமுறைப்படுத்த துடித்துக் கொண்டு இருக்கிறார்கள். திடீர் என்று தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்ட ஜெயலலிதாவும் அதன் கூட்டணி கட்சிகளும், கருணாநிதியும் அதன் துணை பட்டாளங்களும் களத்தில் இறங்கி தொழிலாளர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்க தொடங்கிவிட்டனர்.

கருணாநிதியோ மத்திய அரசுக்கு அளித்துவரும் ஆதரவை மறுபரிசீலனை செய்யப்படும் என கண்ணாமூச்சி அறிக்கை விட்டு பின்பு தான் அப்படிக் கூறவில்லை என்றார். தொழிலாளர் விரோத ஜெயலலிதா ஆட்சியில் அரசு ஊழியர்களும் போக்குவரத்து தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் பட்ட இன்னல்களும் தற்கொலைகளும் எண்ணில் அடங்கா. இப்படியிருக்க தலைவர்கள் மக்களுக்கு தொண்டு புரிவதாக நடித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஸ்டேன்டர்டு மோட்டர்ஸ், பின்னி ஆலை தொழிலாளர்கள் பட்டினியில் தற்கொலை செய்துகொண்ட போதும் வேடிக்கை பார்த்தவர்கள் தான் மாறி மாறி ஆட்சிக்கு வந்த பெருந்தலைவர்கள். திராவிட கழக வீரமணியோ நெய்வேலி நிறுவனத்தின் பங்குகளை தொழிலாளர்களே வாங்கிக் கொள்ள ஆலோசனை வழங்குகிறார். தமது ஓய்வுகாலங்களுக்குப் பின்பு ஓய்வூதியமும் பிடித்த பணமும் கிடைக்குமா என்ற கேள்விக்குறியுடன் வாழும் தொழிலாளர் களுக்கு பங்குகளை வாங்க ஆலோசனை வழங்குகிறார்.



ஜெயலலிதா

துணைக்கட்சிகளின் கூத்துக்களுக்கும் அளவே இல்லை. எதிர்க்கட்சி வரிசையில் உள்ள கூட்டணிகளுக்கு உற்சாகம் அளிக்கும் விதத்தில் சட்டமன்ற கூட்டங்களில் திடீர் என்று தலைகாட்டிய ஜெயலலிதா பின்பு தலைமறைவாகிவிட்டார். எதிர்க்கட்சியின் கூட்டணிகளுக்கு உள்ளேயே புகைச்சல் வர ஆரம்பித்துவிட்டது. திருமாவளவனோ இது தேர்தல் கூட்டணி என்று கூறிவிட்டார்.

# "நாங்கள் புலிகள் அல்ல. அவர்களுக்கு சேவை செய்து வருகிறோம்"

## தமிழகத்தில் கைது செய்யப்பட்ட சிவகரன்

வெடிபொருட்களை அனுப்ப முயன்ற வி.புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஜனவரி 23ல் பலர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் முக்கிய சந்தேக நபரான சிவகரன் "எங்கள் மக்கள் இனிமேல் இலங்கையில் இருக்க இயலாது. தனி நாடு தான் புலிகளின் இலக்கு. இது இலங்கையில் நடக்கும் இறுதிப் போராக இருக்கும். நாங்கள் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழகத்திலிருந்து சேவை செய்து வருகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

கேரளாவில் இருந்து 30 பெட்டி gelex boosters உடன் வந்த வாகனம் சிவகங்கை மாவட்டத்தில் விபத்துக்கு உள்ளானது. இப்பொருட்கள் ராமேஸ்வரத்தினூடாக வி.புலிகளுக்கு அனுப்பி வைப்பதற்காக கொண்டு வரப்பட்டிருக்காலம் என தமிழக காவல்தறையினர் அப்போது சந்தேகித்தனர். இப்பகுதியில் ஆயுதக் கடத்தல்காரர்களின் செயற்பாடுகளும் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. இந்தியக் கடற்படையினர் ரொக்கட் போன்ற ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளிலேயே ஐந்து இலங்கைத் தமிழர்களும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த நான்கு இந்தியத் தமிழர்களும் ஜனவரி 23ல் கைது செய்யப்பட்டனர்.


சிவகரன்(32), செல்வசேந்தன்(34), பாரதிதாசன்(22) ஆகிய மூவரும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். சதீஷ் என்ற நித்தி(18) மட்டக்களப்பைச் சேர்ந்தவர், கரண் என்ற யோகராஜா(25) கிளிநொச்சியைச் சேர்ந்தவர். இவர்கள் ஐவரும் விடுதலைப் புலிகள் என்றும் முதலிருவரும் முக்கியமான நபர்கள் என்றும் கியூ பிராஞ் பொலிசார் தெரிவிக்கின்றனர். சதித்திட்டம் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், வெடிமருந்துப் பொருட்கள் சட்டம் மற்றும் அயல்நாட்டவர் சட்டம் ஆகியவற்றின் கீழ் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து மினி லாரி, கார், ஐந்து லட்சம் ரூபாய் பணம், மூன்று மொபைல் போன்கள் பறிமுதல் என்பன பறிமுதல் செய்யப்பட்டது.

தமிழகத்தில் மீண்டும் விடுதலைப் புலிகள் ஊடுருவி இருப்பது தமிழக அரசை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட பின் கருணாநிதியின் ஆட்சியின் போது இடம்பெற்ற பத்மநாபா கொலையை அடுத்தே தமிழக அரசு விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த தவறியதைக் காரணம் காட்டி கருணாநிதி ஆட்சி கலைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

"இது போன்ற சம்பவங்கள் தமிழகத்தில் நடைபெற திமுக ஆட்சியில் வாய்ப்புகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. எனது ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகள், பயங்கரவாதிகள் தீவிரவாதிகள் தமிழ்நாட்டுக்குள் காலடி எடுத்து வைக்கவே அஞ்சினார்கள்" என அதிமுக தலைவி ஜெயலலிதா முழங்கியுள்ளார்.

"இலங்கையில் இருந்து வந்து தமிழகத்தில் மீண்டும் ஒரு வன்முறையை நடத்த தி.மு.க அரசு அனுமதிக்காது" என முதலமைச்சர் கருணாநிதி இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# பாலஸ்தீன மக்களுக்கு மகிந்த புறமுதுகு காட்டினர்



பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் அதிலிருந்த ஒதுங்கிய சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்று உள்ளது. பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் தொடர்ச்சியாக இழைத்து வருகின்ற அக்கிரமங்களை கண்டிக்கும் தீர்மானம் ஒன்றை அரபு நாடுகள் ஐ.நா பொதுச் சபையில் சமீபத்தில் கொண்டுவந்திருந்தனர். இந்த முக்கியமான தீர்மானத்துக்கு ஆதரவாக உலகில் உள்ள பெரும்பாலான நாடுகள் வாக்களித்துள்ள நிலையில் இலங்கையின் ஐ.நாவுக்கான பிரதிநிதி வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டார். இதன் மூலம் இலங்கை அரபு நாடுகளினதும் அணிசேரா நாடுகளினதும் நட்புறவை அவமதித்து உள்ளது. ஏற்கனவே இத்தீர்மானம் ஐ.நா பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்டு அதை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பாவித்து ரத்துச் செய்திரந்தது.

1948ல் இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல் 1956ல் எஸ்.டபிள்யூ.ஆர். டி பண்டரநாயக்க ஆட்சி ஏற்படும் வரை இலங்கையை ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி அரசுகள் பிரித்தானியாவின் வெளிவிவகாரக் கொள்கையை இலங் கையின் வெளிவிவகாரக் கொள்கையாக பின்பற்றி வந்தன. பண்டாரநாயக்காவின் அரசாங்கமே இலங்கையின் வெளி விவகாரக் கொள்கையை ஏகாதிபத்திய எதிர்ப்பின் அடிப்படையில் மாற்றி அதைத்தது.

அதன் அடிப்படையில் 1956 முதல் இலங்கை, இஸ்ரேலுக்கு எதிராக பாலஸ்தீன மக்களின் நியாயமான போராட்டங்களை உறுதியுடன் ஆதரித்து வந்துள்ளது. பின்னைய அரசுகளும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவான கொள்கை யில் மாற்றம் செய்ய முடியவில்லை.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இலங்கை பலஸ்தீன நட்புறவுச் சங்கத்தின் தலைவராக இருந்து பலஸ்தீன மக்களுக்காக குரல் எழுப்பிவந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசின் கீழ் இலங்கைப் பிரதிநிதியின் செயற்பாடு ஒரு கரும்புள்ளியாகவே கருத வேண்டியுள்ளது. இனப்பிரச்சினைக்கு அரசியல்ரீதியான தீர்வொன்றைக் காணுவதில் போதிய சிரத்தை காட்டாது யுத்த முனைப்புகளில் மட்டும் ஈடுபாடு காட்டிவரும் இலங்கை அரசாங்கம் தனது இராணுவத் தேவைக ளுக்காக இஸ்ரேலிடமும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமும் ஆயுத தளபாடங்களுக்கு கையேந்துவதற்கு நன்றிக்கடனாகவே வாக்களிக்காது ஒதுங்கியது என நம்பப்படுகிறது.

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் தூக்கிலிடப்பட்ட போதும் இலங்கை போதிய பிரதிபலிப்பை வெளிப்படுத்த தவறியமை குறிப்பிடத்தக் கது. (மதுராந்தகன், தேனீ)

# சுயாதீனக் குரல்கள் ஊமையாகின்றது

இலங்கையில் இருந்து வெளிவரும் சுயாதீனக் குரல்கள் ஊமையாக்கப்படுவதாக சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு International Federation of Journalists (IFJ) அறிவித்துள்ளது. இலங்கை மக்களின் கட்டுப்பாடற்ற சுயாதீனமான ஊடகத்திற்கான உரிமையை மறுக்கும் சூழ்நிலையை இலங்கை அரசு முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என சர்வதேச ஊடகவிளலாளர் கூட்டமைப்பு கோரியுள்ளது. இவ்வமைப்பு 115 நாடுகளில் உள்ள 500,000 ஊடகவியலாளர்களைப் பிரதிநிதித்துவபடுத்துகிறது.

இலங்கையில் படிப்படியாக பத்திரிகைச் சுதந்திரம் நீக்கப்படுவதாக அவ்வமைப்பின் தலைவர் கிறிஸ்தொபர் வோறன் அச்சம் வெளியிட்டு உள்ளார். யுத்த பிராந்தியங்களுக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை, ஊடகவியலாளர்கள் சுயதணிக்கையை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது, ஊடகவியலாளர்கள் தம்மை காப்பாற்றிக் கொள்ள நாட்டைவிட்டு வெளியேற வேண்டி உள்ளது, ஊடகங்கள் மிரட்டப்படகின்றன போன்றவற்றை சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு சுட்டிக்காட்டி யுள்ளது.

மேலும் ஏ9 மூடப்பட்டு உள்ளதால் அங்கு பத்திரிகைத் தாளின் விலை மூன்று மடங்காக அதிகரித்து உள்ளது. மேலும் கடுமையான தட்டுப்பாடு காரணமாக யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் நின்று விடும் அபாயமும் ஏற்பட்டு உள்ளது.

கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் மௌனசாமி பரமேஸ்வரியை மேலும் 90 நாட்களுக்கு தடுத்து வைப்பதற்கான நீதிமன்ற உத்தரவை Terrorist Investigation Division TDI ஜனவரி 24 அன்று பெற்றுள்ளது.

Mawbimaஎன்ற சிங்கள நாளிதளின் செய்தியாளரான பரமேஸ்வரி இலங்கை பாதுகாப்புப் படையினரின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எழுதியமைக் காகவே தண்டிக்கப்படுவதாக ஊடகவியலாளர் களை பாதுகாப்பதற்கான குழு Committe to Protect Journalist CPJ தெரிவிக்கிறது. இதன் இயக்குநர் ஜோஎல் சைமன் தெரிவிக்கையில் பரமேஸ்வரி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட வேண்டும் அல்லது அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்றார்.

நவம்பர் 24ல் கைது செய்யப்பட்ட பரமேஸ்வரி விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டு உள்ளதாக சுயாதீன ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

# பாக். இல ஆயுத விற்பனை - யுத்தமும் லஞ்சமும்

இலங்கை - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையேயான ஆயுதக் கொள்வனவுகள் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகி உள்ளது. பாகிஸ்தான் தன்னிடம் ஆயுதக் கொள்வனவை மேற்கொள்ள இலங்கை அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கியது த ரிறிபியூன் இணையத் தளத்தில் டிசம்பர் 24ல் வெளியாகியது. பாகிஸ்தான் இலங்கைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஆயுத விநியோகம் மேற்கொள்வது பற்றி ஆராய்வதாக செய்திகள் கூறுகின்றன.

வறுமைக் கோட்டில் உள்ள தனது ஆயுதங்களையே செப்ரம்பர் 11 தாக்குதலின் பின் அமெரிக்காவின் தயவால் பெறும் பாகிஸ்தான் இலங்கைக்கு ஆயுதவிற்பனையை மேற்கொள்கிறது. பாகிஸ்தான்



நீண்டகாலக் கடனில் இலங்கைக்கு வழங்கும் ஆயுதங்களின் செயற்திறனும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டு உள்ளது. பாகிஸ்தான் இராணுவத்தின் குப்பைகளை இலங்கையிடம் பணத்தைப் பெற்று கொட்டுகிறது என்றும் அதற்கு இலங்கை அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கப்படுவதாகவும் செய்திகள் வெளியாகின்றன.

மேலும் உக்ரெயின் மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் இருந்து 3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு பாகிஸ்தான் கொள்வனவு செய்த ஆயுதங்கள் இலங. கைக்கு 6.9 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது.


இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் சட்டவிரோத பணப்புழக்கத்தின் மையாமாக உள்ளதாகவும் இராஜதந்திரிகளின் சூட்கேஸ்கள் பணப் பெட்டிகளாக ஸ்லாமாபாத் செல்வதாகவும் குற்றம்சாட்டப்படுகிறது. ஆயுத விநியோகங்கள் உடன் பணம் கொடுத்து முடிக்கப்படுவதால் கறுப்புப் பணத்தை இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் மூலம் விநியோகிக்கக் கூடியதாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

# சிறீ லங்காவில் வலுக்கட்டாய சிறுவர் ஆள்சேர்ப்பு ஜ. நா. அறிக்கை



விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து சென்ற கருணா தலைமையிலான குழுவினர் சிறுவர்களை பயிற்சிக்கு கடத்துவதற்கு சிறீலங்கா துருப்பினர் உதவுகின்றனர் என்பதற்கு நம்பகமான ஆதாரங்கள் இருப்பதாக ஜக்கியநாடுகள் சபையின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். அதேவேளை ஜ. நா.வின் இந்தக் குற்றச்காட்டு முற்றிலும் தவறானது என சிறீ லங்கா இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இவ்வாறான ஒரு குற்றச்சாட்டு இலங்கை இராணுவத்தினர் மீது வைக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

சிறுவர்களைப் படையணியில் சேர்ப்பது பற்றி விடுதலைப் புலிகளும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளால் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர்.




# கனடிய டொலர் 445000 பிணையில் விடுவிக்கப்பட்ட கனடியத் தமிழ் மாணவர், அமெரிக்காவிற்கு நாடுகடத்தப்பட உள்ளார்

பயங்கரவாத குற்றச்சாட்டுகள் தொடர்பான நாடுகடத்தல் வழக்கிற்காக ஜனவரி 23ல் சுரேஸ் சிறீஸ்கந்தாராஜா (26) நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு உள்ளார்.

வி.புலிகளுக்கு ஆயுதக்கொள்வனவு, கடத்தல், பணமோசடி போன்றவற்றில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டு கனடாவிலும் அமெரிக்காவிலும் கைது செய்யப்பட்ட 12 பேர்களில் சுரேஸ்ம் ஒருவர். இவர் தற்போது கனடிய டொலர் 445,000 பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இவரை பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு தம்மிடம் ஒப்படைக்கும் படி அமெரிக்க அதிகாரிகள் விடுத்த வேண்டுகோளை கனடிய நீதித்துறை நவம்பர் 21ல் ஏற்றுக் கொண்டுள்ளது.

வோட்டர்லு பல்கலைக்கழக மாணவரான சுரேசை நாடுகடத்துவதற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளை கனடிய நீதி அமைச்சர் Vic Toews ஏற்றுக்கொண்டுள்ளார்.



Eelam Student Society of Waterloo University என்ற பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவரான சுரேஸ் சிறிகந்தராஜாவுடன் முன்னாள் கனடிய நிதியமைச்சரும் தற்போது ஐ நா ராஜதந்நிரியுமான அலன் றொக்.

வி.புலிகளுக்கு உதவியதற்காக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்காக அமெரிக்காவில் இவர் மீது தொடரப்பட்டு உள்ள வழக்கிற்காகவே பொறியியல் துறை மாணவரான சுரேஸ் அமெரிக்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளார். குற்றம்சாட்டப்பட்ட இவர் நான்கு சந்தேக நபர்களுக்கு தலைமை தாங்கியதாகவும் இராணுவ மென்தள கணணி இயக்கிகளையும் தொடர்பு சாதனக் கருவிகளையும் வி.புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு (வட இலங்கைக்கு) கடத்த மாணவர்களை பயன்படுத்தியதாகவும் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. மேலும் நிதி மோசடியிலும் ஈடுபட்டதாகவும் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது.

அமெரிக்காவில் சுரேஸ் சிறீஸ்கந்தராஜா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் கனடாவிலும் குற்றமாகும் என்பதை நீதி அமைச்சர் Vic Toews உறுதிப்படுத்தி உள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பினர் 1997ல் அமெரிக்க அரசினால் பயங்கரவாத அமைப்பு என அறிவிக்கப்பட்டனர். இவ்வாண்டு ஏப்ரல் மாதம் கனடிய அரசும் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பு எனக்கூறித் தடை செய்தது. சுரேஸ் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவர் 25 ஆண்டுகள் சிறைத்தண்டனையை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனத் தெரியவருகிறது.

கருணா குழு சிறார்களை படையணியில் சேர்ப்பதற்கு இலங்கை இராணுவம் உதவுகிறது என்று குற்றம்சாட்டிய அ அலன் றொகின் அறிக்கையை பாதுகாப்பு அமைச்சர் ரபுக்வெல முற்றாக மறுத்துள்ளார். அலன் றொக் சுரேஸ் போன்ற வி புலி உறுப்பினர்களுடன் தொடர்புபட்டவர் என்றும் அமைச்சர் ரம்புக்வெல குற்றம்சாட்டி உள்ளார்.

உண்மைகள் உறங்குவதில்லை.

# We can help you if you wish to return to Sri Lanka. And assist you further once you are back home.



The International Organization for Migration manages migration in a number of ways. In the UK, IOM helps unsuccessful asylum seekers and irregular migrants return to their home countries by coordinating all their travel arrangements including paying for their flight tickets. Asylum seekers are also eligible for extra ssistance in their countries of origin. To find out if you qualify for IOM's assistance, call 0800 783 2332. *London office*: 020 7233 0001. *Liverpool office*: 0151 225 0142. *Glasgow office*: 0141 548 8116

IOM International Orgnization for Migration

0800 783 2332 - www.iomlondon.org

This programme is co-funded by the European Refugee Fund